பொன் மொழி:

நீங்கள் துன்பப்படுகிறீர்களா? அப்படியானால் கடவுளுக்கு நன்றி கூறுங்கள். உங்கள் வாழ்க்கைக்கான உறுதியான அறிகுறியே துன்பம்.

- எல்பர்ட் ஹப்பர்ட்

இணையம்: இந்திய விளையாட்டு ஆணையம் 1984–ல் உருவாக்கப்பட்டது. அனைத்து பகுதிகளிலிருந்தும் திறமையாளர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சிறந்த பயிற்சி வழங்குவது, திறமையை கண்காணித்து மேம்படுத்துவது, தேசிய அளவிலான குழுக்களை உருவாக்குவது, விளையாட்டு உள்கட்டமைப்பை பராமரிப்பது போன்ற பணிகளில் ஈடுபடுகிறது. https://sportsauthorityofindia.nic.in –ல் பல்வேறு விளையாட்டு திட்டங்கள் குறித்து அறியலாம்.

பொது அறிவு: நதிகள் இணைப்பு திட்டத்தால் அனைவருக்கும் நன்மை என்று கூற முடியாது. வங்கதேசம், நேபாளம், பூடான் ஆகியவை இத்திட்டம் தங்கள் நீர்நிலைகளைப் பாதிக்கும் என கவலைப்பட்டன. நதியின் நீர் கடலுக்குச் செல்லும் வழியில் நிகழும் சுற்றுச்சூழல் செயல்பாடுகள் நதிகள் இணைப்பால் பாதிக்கப்படும்; 45 லட்சம் மக்களை வேறு இடங்களுக்கு அனுப்ப வேண்டியிருக்கும். 8 லட்சம் ஹெக்டேர் காடுகள் நீரில் மூழ்கும் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் கவலை தெரிவித்தனர்.

சிங்கப்பூரில் பிரபல நிறுவனங்களின்

உயர் அதிகாரிகளுடன் முதல்வர் ஸ்டாலின் சந்திப்பு

● வர்த்தக உறவு குறித்து அமைச்சர் ஈஸ்வரனுடன் ஆலோசனை

● சென்னை

சென்னையில் அடுத்த ஆண்டு நடக்க உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கவும், தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கவும், பொருளாதார, வர்த்தக உறவுகளை மேம்படுத்தவும் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். சென்னையில் இருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் சிங்கப்பூர் சென்ற அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில், சிங்கப்பூரில் பிரபலமாக விளங்கும் 3 நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளை (சிஇஓ) நேற்று சந்தித்தார்.

முதலில், டமாசெக் சிஇஓ தில் ஹான்பிள்ளை சந்திரசேகராவை முதல்வர் ஸ்டாலின் சந்தித்தார். அப்போது அவர், "புதுப்பிக்கத் தக்க எரிசக்தி உற்பத்தியில் தெற்காசிய நாடுகளிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. தமிழகத்தில் ஏற்கெனவே உள்ள காற்றாலைகளை வலுப்படுத்த வேண்டும். புதிய கடல் சார்ந்த காற்றாலைகளை நிறுவ வேண்டும். தமிழகத்தில் உள்ள புத்தாக்க நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் தொழிலில் முதலீடு செய்ய வேண்டும். 'பின்டெக்சிட்டி' என்ற நிதி நிறுவனங்களுக்கான கட்டமைப்பிலும் முதலீடு செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, செம்கார்ப் நிறுவன சிஇஓ கிம்யின் வாங்க்கை ஸ்டாலின் சந்தித்தார். "தமிழகத்தில் எரிசக்தி துறையுடன் இணைந்து செம்கார்ப் நிறுவனம் பணியாற்ற வேண்டும். நீர் மின்சாரத்தின் 'Pumped Hydro Storage' திட்டங்களுக்கான வழிமுறைகளை மத்திய அரசு தற்போது எளிமையாக்கி உள்ளதால், பொது - தனியார் பங்களிப்பில் தமிழக அரசுடன் செம்ப்கார்ப் நிறுவனம் இணைந்து இத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

பின்னர், கேப்பிட்டாலேண்ட் நிறுவனத்தின் சிஇஓ சஞ்சீவ் தாஸ்குப்தாவை ஸ்டாலின் சந்தித்தார். "உலகின் சிறந்த தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து சிங்கப்பூரில்கேப்பிட்டாலேண்ட் நிறுவனம் வடிவமைத்துள்ள 'சிங்கப்பூர் சயின்ஸ் பார்க்' போன்ற பல்வேறு வகையான ஆராய்ச்சி, மேம்பாடு கட்டமைப்புகளை உருவாக்குவதில் தமிழக அரசு ஆர்வமாக உள்ளது. எனவே, அதற்கு தொழில் நுட்ப பங்களிப்பு, முதலீடுகளை அளிக்க வேண்டும்" என்று ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் முதலீடு செய்ய ஆர்வமாக உள்ளதாகவும், விரைவில் அதற்கான முன்னெடுப்புகளை செய்வதாகவும் முதல்வரிடம் அந்த நிறுவனங்களின் சிஇஓ.கள் உறுதியளித்தனர். தொழில்துறை அமைச்சர் டிஆர்பி ராஜா, தலைமைச் செயலர் இறையன்பு, தொழில் துறை செயலர் ச.கிருஷ்ணன், சிங்கப்பூருக்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அமைச்சருடன் சந்திப்பு

இதையடுத்து, சிங்கப்பூர் போக்குவரத்து, வர்த்தகத் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரனை முதல்வர் ஸ்டாலின் சந்தித்தார். அப்போது தமிழகம் உடனான பொருளாதார, வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், தொழில் முதலீடு குறித்தும் பேசினார். உலக முதலீட்டாளர் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுத்தார்.

வழக்கமான முதலீடுகள் தவிர, பசுமை பொருளாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம் போன்ற துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பு, செமிகண்டக்டர், எலெக்ட்ரானிக் உதிரிபாகங்கள் தயாரிப்புக்கான சாத்தியக்கூறுகள் குறித்து முதல்வருடன் அமைச்சர் ஈஸ்வரன் விவாதித்தார்.

சிங்கப்பூரில் வரும் அக்டோபரில் நடக்க உள்ள பின்டெக் மாநாட்டுக்கு தமிழக அரசின் குழுவை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். தமிழக வளர்ச்சிக்காக பல்வேறு புதிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதற்காக முதல்வருக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

↑ சிங்கப்பூரில் நேற்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்துக்கும், சிங்கப்பூரைச் சேர்ந்த மின்னணு பாகங்கள் தயாரிப்பு நிறுவனமான Hi-P International Pvt. Ltd., நிறுவனத்துக்கும் இடையே ரூ.312 கோடி முதலீடு மற்றும் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, சிங்கப்பூர் நாட்டின் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, துறை கூடுதல் செயலர் எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அரசு மையத்தில் பயின்ற 19 பேர் ஐஏஎஸ் தேர்வில் வெற்றி

தலைமைச் செயலர் இறையன்பு தகவல்

● சென்னை

தமிழக அரசின் மையத்தில் பயிற்சி பெற்ற ஆர்வலர்களில் 8 பெண்கள் உட்பட 19 பேர் அகில இந்திய குடிமைப்பணி தேர்வில் வெற்றி பெற்றுள்ளதாக தலைமைச் செயலரும், பயிற்சி மையத் தலைவருமான வெ.இறையன்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: குடிமைப் பணிதேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு, தமிழக அரசால் நிர்வகிக்கப்படும் அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையத்தில் முதல்நிலை தேர்வு, முதன்மை தேர்வு, மாதிரி ஆளுமைத் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-ம் ஆண்டுக்கான குடிமைப்பணிமுதன்மைதேர்வுக்கு முழுநேரமாக 76 ஆர்வலர்கள் இந்த மையத்தில் பயிற்சி பெற்றனர். ஐஏஎஸ் அதிகாரிகள், கூடுதல் தலைமைச் செயலர் நிலையில் ஓய்வு பெற்ற அதிகாரிகள், பேராசிரியர்கள், உளவியல் நிபுணர்கள் போன்ற வல்லுநர்களைக் கொண்டு மாதிரி ஆளுமைத் தேர்வு நடத்தப்பட்டது.

இதில் 46 ஆர்வலர்கள் முனைப்புடன் பங்கேற்றனர். தற்போது, டெல்லியில் நடைபெற்ற ஆளுமைத் தேர்வில், இப்பயிற்சி மைய ஆர்வலர்களில் 19 பேர் வெற்றி பெற்றுள்ளனர். இவர்களில் 8 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

'சிங்கப்பூரின் தந்தை' லீ குவான் யூவுக்கு

மன்னார்குடியில் நினைவுச் சின்னம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

● சென்னை

சிங்கப்பூரில், சிங்கப்பூர் தமிழ்ச்சங்களுடன் இணைந்து நடைபெற்ற தமிழ் கலை பண்பாட்டு நிகழ்ச்சியில், 'வேர்களைத் தேடி' என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் சிங்கப்பூரில் தேர்வு செய்யப்பட்ட 10 இளைஞர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தமிழ்மொழியில் ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தை முதன்முதலில் ஏற்றுக்கொண்டு செயற்படுத்திய நாடு சிங்கப்பூர். சிங்கப்பூரில் தமிழ் நாளிதழ்தான் முதலில் தோன்றியது. சிங்கப்பூர் நாணயத்திலும் தமிழ் இடம்பெற்றுள்ளது. இப்படி சிங்கப்பூரில் தமிழ் நீக்கமற நிறைந்திருக்க அடிப்படைக் காரணமாக இருந்த முதல் பிரதமர் லீ குவான் யூவுக்கு நன்றி செலுத்துகிறேன்.

தமிழர் வாழாத நாடு இந்த பூமிப் பந்தில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு பரந்து விரிந்து வாழும் தமிழர் அனைவர்க்கும் நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பது திராவிட இயக்கம்தான். நம் தமிழின உணர்வுக்கு அடிப்படையான பெருமைகள் அனைத்துக்கும் இப்போது தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன.

சிங்கப்பூர் - தமிழகம் இடையேயான தொடர்பு 1000 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. இப்போதும் உங்கள் உழைப்பின் மூலம் இந்த நாட்டை உயர்த்தி, அதன் மூலம் நீங்களும் உயர்ந்துள்ளீர்கள்.

ஜனவரியில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்க இங்கு வந்துள்ளேன். இங்கு தொழில் முனைவோராக உள்ள தமிழர்கள் இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

பண்பாட்டுப் பரிமாற்றம் பெருக பல கண்காட்சிகளை நடத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள். இவை குறித்து தமிழகம் சென்ற பின் ஆலோசித்து முறையான அறிவிப்பை வெளியிடுவேன். இங்குள்ள தமிழர்கள் தமிழகம் வந்து அவர்களின் வணிக வளத்தை பெருக்க வேண்டும்.

இதற்கான வசதிகள், அனுமதி அனைத்தையும் தமிழக அரசு செய்து தரும்.

'சிங்கப்பூரின் தந்தை' என போற்றப்படும் லீ குவான் யூவுக்கு தமிழகத்தில் நினைவுச்சின்னம் எழுப்ப நாங்கள் முடிவு செய்துள்ளோம். இது தமிழகத்தில் மன்னார்குடியில் அமைய இருக்கிறது. சிங்கப்பூரில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பகுதியினர் மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். எனவே, லீ குவான் யூ பெயரால் நூலகமும் சிலையும் மன்னார்குடியில் அமையும்.

உங்களை உயர்த்தும் தமிழகத்தை உயர்த்த நீங்கள் அனைவரும் கைகோர்க்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் 'மொழிசார்ந்த முயற்சிகள்' என்ற தலைப்பில் சிங்கப்பூர் சட்ட அமைச்சர் கா.சண்முகம் பேசினார். தலைமைச் செயலர் வெ.இறையன்பு, 'சுற்றுலா மற்றும் பண்பாட்டு வாய்ப்புகள்' தொடர்பாக உரையாற்றினார்.

முன்னதாக முதல்வருக்கு பாரம்பரிய நடனம், நாதஸ்வர இசையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில், முதல்வர் ஸ்டாலின் சிவப்பு நிற அரைக்கை சட்டை, வேஷ்டி, அங்கவஸ்திரம் அணிந்திருந்தார்.

சென்னை ஐஐடியில் கல்வி மேம்பாட்டுக்காக

15 ஆய்வு மையம் திறப்பு

● சென்னை

உயர்கல்வி நிறுவனங்களை ஆராய்ச்சியில் மேம்படுத்துவதற்கான திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உயர்கல்வி நிறுவனங்களை தேர்வு செய்து, அவைகளுக்கு நிதி அளிக்கப்படுகின்றன. அந்த வகையில் கடந்த 2019-ம் ஆண்டு சென்னை ஐஐடியும் உயர் சிறப்பு கல்வி நிறுவனமாக (இன்ஸ்டிட்யூட் ஆஃப் எமினென்ஸ்) தேர்வு செய்யப்பட்டன. இதன் தொடர்ச்சியாக மத்திய அரசின் நிதியின் கீழ் 15 ஆராய்ச்சி பணிகளுக்கான ஆய்வு மையங்கள் சென்னை ஐஐடி வளாகத்தில் நேற்று திறக்கப்பட்டன.

இதில் சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, முன்னாள் இயக்குநர் பாஸ்கர் ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஆய்வு மையங்கள் குறித்து வி.காமகோடி கூறும்போது, "இந்த மையங்கள் சர்வதேச தரத்தில் இருப்பதோடு, நிறுவனத்துக்கு மேன்மையளிக்கும் வகையில் பங்காற்றும். இதில் இருந்து ஏராளமான ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உருவாகும் என நம்புகிறோம்" என்றார்.

அதிமுக ஆட்சியின் ஊழல்களை மறைக்க

முதல்வரின் பயணம் பற்றி அவதூறு பரப்புவதா?

பழனிசாமிக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்

● சென்னை

அதிமுக ஆட்சியின் ஊழல்களை மறைக்க, முதல்வரின் வெளிநாட்டுப் பயணம் குறித்து அவதூறு பரப்புவதா? என எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக முதல்வர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டுப் பயணத்தை கொச்சைப்படுத்தியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அதிமுக ஆட்சியில், வர விரும்பிய தொழில் நிறுவனங்களையும் அண்டை மாநிலங்களுக்கு விரட்டி விட்டு ஆட்சி நடத்திய பழனிசாமிக்கு, வெளிப்படைத் தன்மையோடு நடைபெறும் திமுக ஆட்சி மீது ஊழல் புகார் கூறுவதற்கு என்ன தகுதி இருக்கிறது.

முதலீடு என்றால் ஊழல் பணம் என புதிய அர்த்தம் கொண்ட பழனிசாமி, முதல்வர் மீது அவதூறு பரப்புகிறார். அவர் முதல்வராக இருந்த போது, 13 நாள் பயணமாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு செல்வதற்கு முன் அவரது மகன் மிதுன் அங்கு போனது பழனிசாமியின் ஊழல் பணத்தை முதலீடு செய்யத்தானா? என்ற கேள்வி எழுகிறது. கோடநாடு மர்மங்கள் விலகும்போது பழனிசாமியின் உண்மை முகம் தெரிய வரும். அதுவரை அவதூறுகள் மூலம் அரசியல் செய்யாமல் இருப்பது நல்லது.

அதிமுக ஆட்சியில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என கணக்கு காட்டப்பட்டதே தவிர, வந்த முதலீடுகள் எவ்வளவு என்று நாங்கள் ஆட்சிக்கு வந்த பின் பார்த்தால், அவர் முதலீட்டை ஈர்த்த மாயத்தோற்றம் வெட்ட வெளிச்சமானது. அவர் நடத்தியது உலக முதலீட்டாளர் மாநாடல்ல; உலகச் சுற்றுலா மாநாடு.

அதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகள் சீரழிந்த நிர்வாகத்தை முதல்வர் தற்போது சீர்படுத்தியுள்ளார். நிதி நிலையை சரிசெய்து வருகிறார். தவறு செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கிறார். ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து தொழில் தொடங்க, முதலீடு பெறுவதை ஒரு முழு முயற்சியாகவும் புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதை தினசரிப் பணியாகவும் செய்து வருகிறார்.

தற்போது, அடுத்தாண்டு ஜனவரி மாதம் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்க வெளிநாடு செல்லும்முன், துபாய் போனபோது எவ்வளவு ஒப்பந்தங்கள், எவ்வளவு முதலீடுகள் பெறப்பட்டுள்ளன என்பதை வெளிப்படையாக அறிவித்து சென்றுள்ளார்.

எனவே, திமுகவை, திமுக ஆட்சியை, முதல்வரைப் பற்றி குறை கூற பழனிசாமிக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை.

அடுத்தடுத்து முன்னாள் அமைச்சர்கள் மீதான சொத்து குவிப்பு வழக்குகள் தவிர, பழனிசாமியின் ஊழல் மீதும் சட்டம் தன் கடமையைச் செய்யும். தங்கள் ஆட்சி ஊழலை மறைக்க இதுபோன்ற அவதூறு பரப்பும் வேலைகளில் ஈடுபட வேண்டாம். அவர் பாணியில் நாங்கள் பேசத்தொடங்கினால், ஒருநாள் கூட நிம்மதியாக இருக்க முடியாது என்று எச்சரிக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இபிஎஸ் மகன் அமெரிக்கா சென்றதை

அமைச்சர் நிரூபிப்பாரா?

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கேள்வி

● சென்னை

பழனிசாமியின் மகன் அமெரிக்கா சென்றதை நிரூபிக்காவிட்டால் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் தங்கம் தென்னரசு பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டுமென முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

தொழில் துறைக்கு முதலீடுகளை ஈர்த்தல் என்ற பெயரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்பச்சுற்றுலா மேற்கொள்வதாக அதிமுக பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி விமர்சனம் செய்திருந்தார். இதைத்தொடர்ந்து, தங்கள் ஆட்சி ஊழலை மறைக்க, இதுபோன்ற அவதூறு பரப்பும் வேலைகளில் ஈடுபட வேண்டாம் என அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அண்ணா இறந்த பிறகு கட்சி சீனியாரிட்டியில் நாவலர், என்.வி.நடராஜன், மதியழகன் ஆகியோருக்குப்பின் இருந்த தற்போதைய முதல்வரின் தந்தை கருணாநிதி எப்படி முதல்வரானார் என்ற வரலாறு அனைவருக்கும் தெரியும்.

எந்தவிதமான உழைப்பும் இல்லாமல், தலைவரின் மகன் என்ற ஒரே தகுதியின் அடிப்படையில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் தற்போதைய திமுக தலைவர். தன் 45 ஆண்டுகால உழைப்பால், ஒரே இயக்கத்தில் உழைத்து, கிளைச் செயலாளர் பொறுப்பில் இருந்து படிப்படியாக உயர்ந்தவர்தான் பழனிசாமி.

பெரும்பான்மையான சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஒருமனதாக முதல்வர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 2017 முதல் 2021 வரை தமிழகத்தின் முதல்வராக திறம்பட ஆட்சி நடத்தியவர். பழனிசாமி முதல்வர் பதவியை வகிப்பதற்கு முன்போ, பதவி வகிக்கும் போதோ அல்லது இன்றுவரையோ அவரது மகன் அமெரிக்காவே போகவில்லை என்று நான் சவால் விடுகிறேன். இதை முதல்வர் மு.க.ஸ்டாலினோ, அறிக்கை வெளியிட்டுள்ள அமைச்சர் தங்கம் தென்னரசுவோ, பழனிசாமி மகன் அமெரிக்கா சென்றார் என்பதை நிரூபிக்க வேண்டும். இல்லாவிடில், ஸ்டாலினும், தங்கம் தென்னரசுவும் தங்களது பதவிகளை உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும்.

மக்கள், ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளையும், சந்தேகங்களையும் கட்சியின் பொதுச்செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அவரின் கேள்விகளுக்கு நேரடியான விளக்கத்தை அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட் TVS

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
இணையதளம் : www.tvsmotor.com; **தொலைபேசி** : (044) 28332115, **தொலைநகல்** : (044) 28332113
மின்னஞ்சல் : contactus@tvsmotor.com; **CIN** : L35921TN1992PLC022845

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013–ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜராகாமல் காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலமாக கம்பெனியின் 31–வது வருடாந்திர பொதுக்கூட்டம் **திங்கட்கிழமை 24 ஜூலை 2023 அன்று** நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி, கம்பெனி அல்லது அவர்களின் சம்பந்தப்பட்ட முதலீட்டு பங்கேற்பாளர்களின் (டெபாசிட்டரி) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் 31வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் 31 மார்ச் 2023–ல் முடிந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் (வருடாந்திர அறிக்கை) ஆகியவை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பப்படும். காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் இணையலாம் மற்றும் பங்கேற்கலாம். வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப் பதிவு மூலமாக வாக்களித்தல் அல்லது தொலைதூர மின்னணு வாக்குப் பதிவின் மூலம் பங்கேற்க மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்படும். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். கம்பெனியின் இணையதளம் www.tvsmotor.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளான பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளங்கள் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் இணையதளம் i.e. www.evoting.nsdl.com‌ல் அறிவிப்பு பதிவேற்றம் செய்யப்படும். (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக அளிக்கப்பட்ட முகவர்).
3. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கம்பெனி / டெபாசிட்டரியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாதவர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் ஸ்கேன் நகல்களை corpserv@integratedindia.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி 31வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும் அல்லது மின்னணு வாக்குப்பதிவு உள்பட காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) ஆகியவற்றை மென்பொருளாக பதிவு செய்வதன் மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   a. தங்களது பெயர், ஃபோலியோ எண், முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம்.
   b. பங்கு சான்றுகளின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின் பக்கம்)
   c. சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட பான் மற்றும்
   d. உறுப்பினரின் ஸ்கேன் பதிவு செய்யப்பட்ட முகவரிக்காக ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை / ஆதார் ஆகியவற்றின் சுயசான்றளிக்கப்பட்ட செய்யப்பட்ட நகல்கள்.
4. மின்னணு கிளியரிங் சேவையை தங்கள் வங்கிக் கணக்குகள் மூலமாக நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையை புதுப்பிக்காத காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட விவரங்கள் / ஆவணங்களை, மேற்கண்ட பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மின்னஞ்சல் மூலம் corpserv@integratedindia.inக்கு அனுப்பி மின்னணு முறையில் அவர்களின் வங்கி கணக்கிற்கு ஈவுத்தொகையை நேரடியாக பெறுவதற்கு அவர்களது மின்னணு வங்கி ஆணையை பதிவு செய்ய வேண்டும்.
   a. ஈவுத் தொகை பெறக்கூடிய வங்கி கிளை, பெயர் மற்றும் வங்கி கணக்கு வகை
   b. கோர் வங்கி தீர்வுகளை அமல்படுத்திய பின்னர் அவர்களுடைய வங்கியால் ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண்
   c. 11 டிஜிட் ஐஎஃஎஸ்சி குறியீடு மற்றும்.
   d. ஒரு வேளை பங்குகளை இணைத்து வைத்திருந்தால் முதலில் வைத்திருப்பவர் அல்லது உறுப்பினரின் பெயர் கொண்ட ரத்தான காசோலையின் சுயசான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்
5. டீமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அவர்களின் டெபாசிட்டரியிடம் அவர்களது மின்னஞ்சல் முகவரிகளை புதுப்பிக்க வேண்டும்.
6. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை டீமேட் முறைக்கு மாற்றி அதன் பயன்களை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
7. மின்னஞ்சல் முகவரியை புதுப்பித்தல் செயல்முறையைத் தொடங்க டீமேட் கணக்கில் பங்குதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்களில் எஸ்எம்எஸ் அனுப்ப நிறுவனம் NSDL மற்றும் CDSL மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இந்த வசதியைப் பெறவும், அதற்கேற்ப அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் புதுப்பிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிகள் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி மற்றும் கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் மற்றும் நலனுக்கான மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இயக்குனர் குழு ஆணையின்படி
K.S. ஸ்ரீநிவாஸன்
கம்பெனி செயலாளர்

சென்னை
மே 24, 2023

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
இணையதளம் : www.sundaram-clayton.com; **தொலைபேசி** : (044) 28332115, **தொலைநகல்** : (044) 28332113
மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com; **CIN** : L35999TN1962PLC004792

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013–ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜராக